பொருட்களினுடைய விலையும் தாறுமாறாக ஏறிக்கொண்டே இருக்கின்றது. ஆகவே, அது பொதுவாக மக்களைப் பாதிக்கிறது.

இன்றைக்குக்கூட பத்திரிகைகளிலே பல செய்திகள் வருகின்றன. பட்டினிக் கொடுமைக்கு உள்ளாகியிருக்கிற நாடுகளில் இந்தியா 67-வது இடத்திலே இருக்கிறது என்று செய்தி வருகின்றது. இதை நாங்கள் சொல்லவில்லை, நாடாளுமன்றத்திலே ஒப்புக்கொண்ட செய்தி அது. அப்படியானால், இந்த நிலைமைகளைப் போக்க வேண்டுமானால் விலைவாசி குறைய வேண்டும். வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டும். ஏழையெளிய மக்களுக்குத் தாராளமாக மானிய விலையிலோ அல்லது இலவசமாகவோ உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டும். இதை மத்திய அரசு செய்ய வேண்டும். நம்முடைய மாநில அரசும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கிறீர்கள். அதை மேலும் வலுவாக எடுத்தால்தான் அந்த நிலையிலிருந்து நம்முடைய இந்தியாவையோ அல்லது மாநிலத்தையோ பாதுகாக்க முடியும். ஆகவே, விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில், வாங்கும் சக்தி இருக்கிறது என்று மத்திய அரசாங்கம் சொல்கிறது; நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திலே தாங்கும் சக்தி இருக்கிறது சொல்கிறார்கள்; வாங்குகிற சக்தியும் தாங்குகிற சக்தியும் உண்மையிலேயே இருக்கிறதா என்பதைப் பரிசீலித்து, மக்களைத் தாங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் மாற்றிச் சொல்கிறார். இங்கே வாங்கும் சக்தி இருக்கிறது என்று மத்திய அரசு சொல்வதைப்போல, நான் சொல்லவில்லை. மத்திய அரசின் நிலை வேறு; தமிழ்நாட்டிலே இந்த அரசு சொல்கிற நிலை வேறு. ஏனென்றால், விலையே வேறு வேறாக இருக்கிறது. விலையே வேறு வேறாக இருக்கும்போது, நிலையும் வேறுபடுவதிலே தவறு இல்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வாங்கும் சக்தியை மக்களுக்கு உருவாக்குவதற்குப் பதிலாக, இருக்கிற நிலைமையிலே

10 பொருட்கள் மளிகைக் கடையில் - மளிகைச் சாமான்கள் வாங்கும்போது, அரிசி எப்படி மிக மிகக் குறைந்த விலைக்குத் தரப்படுகிறதோ, அதைப்போலவே, பருப்பு, உளுந்து, எண்ணெய் போன்ற மளிகைப் பொருட்கள் எல்லாம் - மக்களுக்கு வசதியாக அவர்கள் வாங்குகின்ற அளவிற்கு வழங்கப்படுகின்றன. எனவேதான், இங்கே விலைவாசியால் மக்கள் அதிகம் துயரம் அடையவில்லை. அதை ஓரளவு தணிக்கின்ற அந்தக் கவலையை மாநில அரசு பொறுப்பேற்று நடத்துகிறது என்றுதான் சொன்னேனேதவிர, "வாங்கும் சக்தி இருக்கிறது. ஆகவே, விலைவாசி ஏறலாம்" என்று நான் விலைவாசி ஏற்றத்திற்கு என்றைக்கும் வக்காலத்து வாங்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன point of order செல்வி பாலபாரதி?

பிற்பகல் 12-15

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தின் மக்களுக்கு வாங்கும் சக்தி இருக்கிறது. ரேஷன் கடையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, அதுபோன்று மளிகைப் பொருட்கள் குறித்து குறிப்பிட்டார்கள். அந்த ரேஷன் கடைக்கு அருகிலே இருக்கக்கூடிய மளிகைக் கடையில் அதே அரிசியின் விலை 47 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இங்கே எடுக்கக்கூடிய இதே நடவடிக்கையை அருகில் இருக்கக்கூடிய அதே கடைக்கும், பொருட்களின் விலையைக் குறைப்பதற்கும் எடுக்க வேண்டும். மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நாங்கள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கை. அது எடுக்கப்படவில்லை என்பது தமிழகத்தினுடைய மக்களுக்கு மிகப் பெரிய நெருக்கடியை, சுமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. பண்டிகைக் காலங்களைக்கூட கொண்டாட முடியவில்லை. 300 ரூபாய் சேலை இன்றைக்கு 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்தச் சிரமத்தை தமிழக முதல்வர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of order-ல் இது வராது. திரு. சிவபுண்ணியம், முடித்தாகிவிட்டதா? மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, பண்டிகையை மக்கள் கொண்டாடினார்களா, இல்லையா என்பதை அம்மையார் அவர்கள் "பாண்டி பஜாரு"-க்குச் சென்று பார்த்திருந்தால் தெரியும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், அடுத்த உறுப்பினரை நான் கூப்பிடப்போகிறேன். (குறுக்கீடு) உங்கள் உரை முடிந்தது. திரு. ஆர். ஞானதாஸ். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இளைஞர்கள் சிறு தொழில் செய்வதற்கான கடன் மத்திய அரசின் சார்பில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டும் நம்முடைய தமிழகத்திற்கு. இது வரையிலும் ஒதுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதைப் பெறுவதற்கான முயற்சியை நம்முடைய மாநில அரசு எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பல மாவட்டங்களில் தாட்கோ மூலமாக தனி நபர் கடன் வழங்குவது குறைவாக இருக்கிறது என்ற செய்தி வருகிறது. அதிலும் குறிப்பாக விருதுநகர் மாவட்டத்திலே அநேகமாக வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை வழங்குவதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

தென்னை நல வாரியத்திலே விடுபட்டிருக்கிற மாவட்டங்களை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானதாஸ். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கும்,